

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.11.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 18 கோடியே 90 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 87 புதிய '108 அவசரகால ஊர்திகளின் சேவையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு.சு.வினீத், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.11.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் விருதுநகர், தேனி, இராமநாதபுரம், திருவள்ளூர், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் கிறித்தவர்களுக்கான அரசு பொது கல்லறைத் தோட்டங்கள் மற்றும் விருதுநகர், தேனி, திருவள்ளூர், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் இஸ்லாமியர்களுக்கான அரசு பொது கபர்ஸ்தான்கள் அமைத்திட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடங்களை சுற்றுச்சுவர், பெயர் பலகை மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்து முறையாக பராமரிக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கிடும் விதமாக அதற்கான ஆணையினை நகராட்சி ஆணையர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ்.எம். நாசர், இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., சுபேர்கான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.11.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் தொழில் நுட்ப உதவியாளர் (சிவில்) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 36 நபர்களுக்கும், நகர் ஊரமைப்பு இயக்ககத்தில் அளவர் / உதவி வரைவாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 24 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம். வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை கிண்டியில் 118 ஏக்கரில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில்

# நீர்நிலைகளின் கரைகள் சீரமைக்கும் பணி - தோட்டக் கலைப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, நவ.3-**

**தமிழ்நாடு முதலமைச்சர். மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.11.2025) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில், முதற்கட்டமாக நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணிகள், அரியவகை மரங்கள், அழகிய மலர்ச் செடிகள் நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் பணிகள் ஆகியவற்றை தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான சென்னை, கிண்டியில் அமைந்துள்ள நிலத்தில் சுற்றுச் சூழல் பூங்கா மற்றும் அது தொடர்பான பணிகளை அமைப்பதற்காக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் 20.09.2024 நாளிட்ட அரசாணையின்படி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு 118 ஏக்கர் நிலம் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலத்தில், சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசால் அறிவிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அப்பகுதியில் மழைநீரை சேகரிக்கும் வகையிலும், சென்னையின் மையப்பகுதியை பெரும் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நான்கு குளங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

தோட்டக்கலைத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்ட சென்னை கிண்டியில் உள்ள இந்நிலத்தில், பல்வேறு இயற்கை சார்ந்த அனுபவத்தினை அளிக்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

இச்சிறப்புமிக்க சுற்றுச்சூழல் பூங்கா தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் அமைக்கப்பட உள்ள நிலையில் இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அங்கு அமைந்துள்ள நீர்நிலைகளின் கரைகளை வலுப்படுத்துதல், மரக்கன்றுகளை நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் அமைத்தல் ஆகிய பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கணபதி, பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு. மகேஷ் குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, நில நிர்வாக ஆணையர் கே.எஸ். பழனிசாமி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வேளாண்மை உழவர் நலத்துறை செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பி. முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 18 கோடியே 90 லட்சத்து 46 ஆயிரம் ரூபாயில்

# 87 புதிய 108 அவசர கால ஊர்திகளின் சேவை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, நவ.3-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.11.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 18 கோடியே 90 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 87 புதிய '108' அவசரகால ஊர்திகளின் சேவையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

'108' அவசரகால ஊர்தி சேவையானது 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசானது EMRI GHS என்ற தனியார் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் '108' அவசரகால ஊர்திகளின் சேவையை வழங்கி வருகிறது. இச்சேவை 24x7 மணி நேரம் என்ற சேவையின் அடிப்படையில், பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பொதுமக்கள் அவசரகால மருத்துவ தேவைக்கு "108" என்ற கட்டணமில்லா இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பயன்பெறுகின்றனர்.

அவசரகால நெருக்கடியின் போது தேவையான மருத்துவ உதவியை எளிதாகவும், உடனடியாகவும் பொதுமக்கள் அனை வரும் பயன்பெறும் வகையில் வழங்க, தற்போது 1,353 எண்ணிக்கையிலான '108' அவசரகால ஊர்திகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 977 அடிப்படை வசதி கொண்ட அவசர கால ஊர்திகள், 307 மேம்படுத்தப்பட்ட அவசரகால ஊர்திகள், 65 பச்சிளங்குழந்தைகளுக்கான ஊர்திகள் உள்ளிட்ட ஊர்திகள் அடங்கும்.

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை '108' அவசரகால ஊர்திகளின் சேவை மூலம் கருவுற்ற தாய்மார்கள், சாலை விபத்துகளில் காயமுற்றோர், இதர அவசரகால மருத்துவ தேவைகள் என மொத்தம் 85,98,054 மருத்துவ பயனாளிகள் பயன்பெற்று உள்ளனர். இவைத்தவிர, 41 இரு சக்கர வாகன அவசரகால ஊர்திகள் மூலம் 1,61,688 மருத்துவ பயனாளிகளும், பச்சிளங்குழந்தைகளுக்கான சேவை மூலம் 95,119 மருத்துவ பயனாளிகளும், பழங்குடியினர் பகுதிகளில் வசிக்கும் 4,30,697 மருத்துவ பயனாளிகளும் பயன்பெற்றுள்ளார்கள்.

**87 புதிய '108' அவசரகால ஊர்திகள்**

'108' அவசரகால ஊர்திகளின் சேவையை மேலும் செம்மையாக செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் 18 கோடியே 90 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 87 புதிய '108' அவசரகால ஊர்திகளின் சேவையினை இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு.சு.வினீத், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு! பெரம்பலூர் - குன்னம் சட்டமன்றத் தொகுதி

# என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை! வீ.ஜெகதீசன் தலைமை!

பெரம்பலூர், நவ. 3 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில், பெரம்பலூர்,குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பாக நிலை முகவர்கள்(BLA2) பாக நிலை டிஜிட்டல் முகவர்கள், BDA மற்றும் IT WING பூத் ஆலோசனைக் கூட்டம், ஜே.கே.திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

"என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" எனும் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் முழக்கத்தின்படி, 2026 சட்டமன்ற தேர்தலில் "வெல்வோம் 200, படைப்போம் வரலாறு" எனும் வெற்றிப்பயணத்தை தொடரும் வகையில், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரும் மண்டல பொறுப்பாளருமான கே.என். நேரு மற்றும் கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா. எம்.பி. ஆகியோர் வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், பெரம்பலூர், குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2) பாக நிலை டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் IT WING பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம், ஜே. கே.மஹால் திருமண மண்டபத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இது வெறும் தேர்தலுக்கான பணி அல்ல, ஒட்டு மொத்த இந்தியாவை ஒரு நாடாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு நமது முதல்வரிடம்தான் வந்துள்ளது. அதனால் மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களை முதலமைச்சர் ஆக்க வேண்டும் என்று பேசினார்.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த்தன், ஏ.கே.அருண், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன்,பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், செ.அண்ணாதுரை, ஆர்.முருகேசன், ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்நி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,ஏ.எஸ்.ஜாகிர் உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், டி.ஆர்.சிவசங்கர், ஆர். அருண், மா.பிரபாகரன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கவிஞர் .முத்தரசன், சு.தங்கராசு, ஆர். வேணுகோபால், ஏ.கே.எம்.கரிகாலன், காடூர்.கவியரசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், தங்க.கமல், வெ.கார்மேகம், எ.ஜாகிர்உசேன், ஆர்.குமார், எம்.சுந்தர்ராஜ், க. ரமேஷ், மாவட்ட பிரதிநிதி எஸ். அழகுவேல், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், வேப்பூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரா.சிவா, கிளைக் கழக செயலாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2) பாக நிலை டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் IT WING பூத் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தல்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை, நவ.3–

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (1.11.2025) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு65க்குட்பட்ட சிவசக்தி நகர், மகாத்மா காந்தி நகர், கண்ணகி நகர் மற்றும் வினோபா நகர் ஆகிய பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் பணி, கழிவுநீர் கால்வாய் அமைத்தல், தெரு விளக்குகள் கூடுதலாக அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பிரச்சனைக்கு தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது:–

கொளத்தூர் தொகுதி மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் தங்கு தடையின்றி குடிநீர், மின்சாரம் உள்ளிட்டவைகள் மேற்கொண்டு சிறப்புமிக்க தொகுதியாக திகழ்கிறது, இதற்கு முக்கிய காரணம் முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சி தான்.

கொளத்தூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட பல்வேறு பகுதிகள் அரசுக்கு சொந்தமான பல இடங்களில் 30 ஆண்டுகளுக்கு மேல் வசித்து வரும் மக்களுக்கு அடிப்படை தேவைகள் இல்லை என்ற குறைகள் முதல்வர் அவர்கள் கவனத்திற்கு சென்றவுடன், தற்போது சிவசக்தி நகர், கண்ணகி நகர், அண்ணா நகர், மகாத்மா காந்தி நகர், வினோபா நகர் ஆகிய பகுதிகளில் பிரச்சினைகள் குறித்து துறை சார்ந்த உயர் அதிகாரியுடன் நேரடியாக ஆய்வுகள் மேற்கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இன்றைக்கு கொளத்தூர் பகுதிகளில் உள்ள அனைத்து தெருக்களிலும் இரண்டு மணி நேரம் ஆய்வு மேற்கொண்டோம்.

பொதுமக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம். தீர்க்கப்படாமல் இருக்கின்ற பல பிரச்சனைகளை ஒரு முடிவினை முதல்வர் அவர்கள் எடுப்பார்கள். கொளத்தூர் தொகுதி பொருத்தவரை முழுமையாக அனைத்து அடிப்படை தேவைகளும் நிறைவேற்றப்பட்ட தொகுதியாக மாற்றுவது முதலமைச்சருடைய கனவு. இந்த கனவு ஏற்ற வகையில் குடிநீர், கழிவுநீர் வெளியேற்றுவதற்கு, பூங்கா, தடையில்லா மின்சாரம், திருமண மண்டபம் அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக கொளத்தூர் தொகுதியில் 13 பள்ளிகள் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். சுமார் 11 பள்ளிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. புதிதாக இரண்டு பள்ளிகள் சீனிவாசன் நகர், கம்பன் நகர் வருகின்ற 2026 ஜனவரி மாதத்திற்குள் திறக்கப்படும்.

குடிநீர் வராத சில பகுதிகளில் 140 கிலோ மீட்டர் அளவிற்கு புதிதாக குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், சென்னைக் குடிநீர் தலைமைப் பொறியாளர் இராதாகிருஷ்ணன், மின்சார வாரிய கண்காணிப்புப் பொறியாளர் (வடக்கு) பழநிவேலன், மாமன்ற உறுப்பினர் நாகராஜன், வருவாய்த்துறை, மின்சாரத்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதியில் வட்ட கிளை இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக இளைஞரணி அமைப்பாளர்கள் ஆகிய பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களை நேரில் சந்திக்கும் கூட்டம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர்,மண்டல தலைவர் டி.காமராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர செயலாளர், எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ, சட்டமன்ற தொகுதி இளைஞரணி பார்வையாளர் ஜெ.ஜெ.எபினேசர்.எம்.எல்.ஏ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ்,டி.ஆர்.கோபி ஆகியோர் முன்னிலையில் பகுதி கழக நிர்வாகிகளும் இளைஞரணி நிர்வாகிகளும் திரளாக பங்கேற்றனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் தலைமையில் திருவள்ளூரில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏகலந்து கொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டம் குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கினார் உடன் வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, திருத்தணி எம்.பூபதி, ஜி.பி.ராஜா, இ.குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், ஜெயபாரதி, பா.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், எம்.கே.சுப்பிரமணி,மாஸ்டர் சேகர், சண்முகநாதன், நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் உள்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்